(c) the rates at which paddy was purchased?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (a) Paddy is not procured from the millers under the voluntary procurement scheme.

(b) & (c) Do not arise.

அரிசி கொள்முதல்

*258 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) அறுவடை காலத்தில் குறுவை, சம்பா அரிசியை கொள்முதல் செய்ய அரசாங்கம் உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆமென்றால், எந்த முறையில் கொள்முதல் செய்யப்படும் ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ), (இ) 1963-ல் சம்பா, குறுவை அறுவடைகளின்போது இந்திய அரசாங்கத்துக்காக ஒரு லட்சம் மெட்ரிக் டன் அரிசி கொள்முதல் செய்ய இந்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது. குறுவை அறுவடையின்போது மில் அதிபர்களிடமிருந்து நிர்ப்பந்தமற்ற கொள்முதல் திட்டத்தின்கீழ் அரிசி கொள்முதல் செய்யப்படும்.

திரு. எம். தண்டாயுதபாணி : இப்பொழுது அரிசியாகக் கொள்முதல் செய்யப்படுகின்ற காரணத்தினால், சர்க்கார் திட்டமிட்டபடி போதுமான அளவு கொள்முதல் செய்ய முடியவில்லை. நெல்லாகக் கொள்முதல் செய்தால், சர்க்கார் குறிப்பிட்ட அளவு பெற முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு, இதை மாற்றும் நோக்கம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இப்பொழுது குறுவை சீஸனில் அரிசியாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு ஹல்லருக்கு 10 டன் கொடுக்க வேண்டுமென்று, இது சம்பந்தப்பட்ட சங்கத்தைக் கலந்துகொண்டு முடிவு செய்தோம். அந்த முறையில் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

Sacrifice of buffaloes

*259 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether it is a fact that buffaloes were killed in a savage manner on 24th January 1963 near Ootacamund during tribal ceremonies; and

(b) if so, the action proposed to be taken to ban such practices in future?

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) A statement[a] is placed on the table of the House.

(அ) & (இ) இது குறித்து அறிக்கை ஒன்று சபையில் வைக்கப்பட்டுள்ளது.

---

[a] Printed as Appendix VI on pages 150-151 supra.